
அம்பலவன் புவனேந்திரன்



# கவிஞன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவன் புவனேந்திரன்

# கவிஞன

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

எல்லோரும் சொல்கிறார்கள் கவிஞன் பிறக்கிறான் என்று. கவிஞன் பிறப்பதே இல்லை. கவிதைகள்தான் பிறக்கின்றன. கவிஞன் படைக்கின்றான்.

உன்னையும், என்னையும், மண்ணையும், விண்ணையும் படைத்த ஒருவன் இருக்கின்றான். அவன்தான் பெருங்கவிஞன். அவன் படைத்த மேலான படைப்புக்கள்தான் அவன் இருக்கின்றான் என்பதை வலியுறுத்துகின்றன.

ஒரு படைப்பாளியின் ஜீவனை அவனது படைப்புக்களில் இருந்துதான் நாம் அறிந்து கொள்ள முடியும். வள்ளுவன், கம்பன், தொல்காப்பியர் போன்றோரின் உண்மையான பெயர்கள் என்னவென்று நம்மெவருக்கும் தெரியாது. ஆனால், அவர்கள் படைத்த படைப்புக்களே அவர்களுக்குப் பெயர்களாகவும், அவர்கள் வாழ்வதாகவும் நமக்கு கூறிக்கொண்டிருக்கின்றன.

இயற்கை என்பது உண்மை, வாழ்க்கை என்பது சரிதை. இந்த உண்மையான சரிதையை சிந்தித்து தியானிப்பவன்தான் கவிஞன்.

தன்னுடைய சமகால உண்மைகளை இனம், மொழி, நாடு கடந்து எல்லோருக்கும் எல்லாமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநின்று சொல்கின்ற கவிஞன் காலத்தை வென்று, மரணத்தை கடந்து வாழ்கின்றான்.

பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, போய்யாகிப் போகின்றவன் கடை விளம்பரக் கடதாசி போன்று காலத்தால் கசக்கி எறியப்படுகிறான்.

ஜீவநீரூற்றுக்கள் வற்றுவதேயில்லை. அந்த வற்றாத நதியில்தான் சொல்லாட்சி வல்லாட்சி இருக்கும். வேலைக்கு விண்ணப்பம் செய்து காத்து நிற்கும் பட்டதாரிகளை போன்று, சொற்கூட்டங்கள் கவிஞனின் அழைப்பாணைக்காக காத்துக்கிடக்கும். சொற்களை தேடி அலைந்து திரிபவன் கவிஞனாய் இருக்க முடியாது.

உணர்ச்சி, கற்பனை, கருத்து இவைகளை அறிவுக் காட்சியாக வகைப்படுத்தும்போது சொற்சந்தங்கள் நிரை நிரையாக திரண்டு வரும். இதைத்தான் மகாகவி பாரதியார்

"வெள்ளத்தின் பெருக்குப்போல்
கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும்....."

என்று சொன்னார்.

கவிதையின் கருவென்பது கண்களால் காணமுடியாது. பெண்ணின் கருவிலுள்ள உயிர் ஆணா, பெண்ணா, அது எப்போது, எங்கே, எப்படி பிறக்கும் என்பதையெல்லாம் இந்த விஞ்ஞான அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தி விடுகின்றது. ஆனால் ஒரு கவிஞனின் கவிதை பதிவாக்கப்பட்டதன் பின்புதான் அடையாளமே காட்டப்படுகின்றது.

இங்கே இனிய தமிழில், எழிய நடையில் ஒரு கவிஞன் பதிவாக்கப்பட்டிருக்கிறான். இவனுடைய படைப்பின் சிறப்பு கிழக்கின் இயற்கை அழகிற்கும் வாழ்க்கை வனப்பிற்கும் கருத்தரிக்கப்பட்டிருக்கின்றது. இவனுடைய வார்த்தையின் வன்மை மட்டக்களப்பின் எழுவான்கரைக்கும் படுவான்கரைக்கும் இடையிலிருக்கும் குருமண்வெளியில்தான் கோர்க்கப்பட்டது.

இந்த மண்ணிற்கும் கலை, இலக்கிய வாதிகளுக்கும் எப்போதும் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்து கொண்டே வந்திருக்கிறது. கன்னித்தமிழ் புலவர் கணபதிப்பிள்ளையையும், அருந்தமிழ் எழுத்தாளர் அருள்செல்வநாயகத்தையும், பாட்டுடைத்தலைவன் ராஜபாரதியையும் அம்பலவன் புவனேந்திரன் அவர்களுக்கு முன்னோடியாக தந்த பெருமை இந்த மண்ணுக்குரியது.

ஆசிரியர் அம்பலவன்புவனேந்திரன் அவர்கள் தான் பிறந்த மண்ணிலேயே தன் பேற்றோரைப் போலவே ஒரு ஆசிரியராக பாடசாலையில் கடமையாற்றியவர். பத்திரிகைகளிலும் வானொலியிலும் காத்திரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளை எழுதி பலரின் பாராட்டுக்களைப் பெற்றவர்.

நீதியும் நியாயமும் நிர்மூலமாக்கப்பட்ட நம் சொந்த மண்ணில் நிலைத்து நின்று எழுதமுடியாமல் புலம்பெயர்ந்து இன்று ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தன்னுடைய இயல்பு நிலையை மாற்று முடியாமல் எழுதிக்கொண்டே இருக்கிறார். இவருடைய இரண்டாவது படைப்புத்தான் நம் கையில் இருக்கும் "கவிஞன்". தமிழ் மீது கொண்ட தாகமும் தாயகத்தின் மீது கொண்ட மோகமும் இவரின் தூக்கத்தை எவ்வளவு கலைத்திருக்கிறது என்பதை நான் இந்த நூலை படிக்கும் போது உணர்கிறேன்.

ஒரு மனிதன் தன்னை எதனோடு தொடர்புபடுத்திக்கொள்கிறானோ அதை சுற்றியே அவனுடைய எண்ணங்கள் வண்ணங்களை தீட்டிக் கொண்டிருக்கும். பாரதிதாசன் சந்த இசைக்குள் தன்னை இருத்தியவன் என்பதால் மிக மெல்லிய இசைகளைக்கூட துல்லியமாய்க் கேட்கும் ஞானமுடையவனாக இருந்தான். தன்னுடைய "வானம்பாடி" எனும் கவிதையிலே

"வானந்தான் பாடிற்றா
வான் நிலவு பாடிற்றா
தேனை அருந்திச்
சிறுதும்பி மேலேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிசை நல்கிற்று...." என்று கம்பியில்லாமலே தும்பிகளால் மீட்டப்படும் அந்த மெல்லிய இசைகளையும் கேட்க கூடிய வகையில் அமைதியான சூழ்நிலையில் அந்தக் கவிஞன் இருந்திருக்கிறான். நம் அம்பலவன்புவனேந்திரன் அவர்களோ அடுப்புக்குப் பக்கத்தில் குழந்தையை இருத்திவிட்டு ஆற்றங்கரைக்கு போன தாயைப் போல் கொலையும், கொள்ளையும், கொடுமையும் கூத்தாடும் மண்ணில் தன் உறவுகளை விட்டுப் பிரிந்து வந்த வேதனையில் தவித்து நிற்கிறார்.

"இடியல்லோ விழுகுதங்கே
இனமல்லோ அழியுதங்கே......." என்ற

ஏக்கத்திலிருப்பவரால் சோலைக்குயில்களின் காதல் கவிதைகளை எப்படி ரசிக்க முடியும்? தாயை பிரிந்த சேய்களும், சேய்களைப் பிரிந்த தாய்மாரும் தெருவினிலே செத்த வீடுகளை நடாத்திக் கொண்டிருக்கும் போது குயிலின் பாட்டை யாரால் ரசிக்க முடியும்?

"சோலைக்குள்ளே சுகமாக அமர்ந்து
சோடியுடன் பாடும் குயிலே- எங்கள்
சாலையிலே நடக்கின்ற சச்சரவை உணராது
சந்தோசமாய் பாடுவது உனக்கு நியாயமா?....

என்று குயிலுடன் கோபப்படாமல், பண்பட்ட மனிதருக்குரிய நிதான நெறியில் இருந்து பிளறாது நீதியின் பெயரால் கோரிக்கை விட்ட கவிஞர் இன்னுமொரு இடத்தில் ஆயுதப் பேய்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து அகதிகளாக அல்லல்பட்டு உயிர்தப்ப ஓடி வந்த மனித ஜீவன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார்க்கடலுக்குள் தேடும்போது உணர்ச்சி வசப்படுகிறார். பொங்கி எழும் வங்கக் கடலோடு பொருதுகிறார்.

"வங்கக் கடலே வங்கக் கடலே
எங்கே என் குடும்பம்
எங்கே என் கிராமம்
எங்கே என் தேசம்
அடிக்கடி அலைவீசி
ஆத்திரத்தை மூட்டாதே!
வெடிக்கின்ற நெஞ்சுக்குள்
வெந்நீரை வார்க்காதே.....

என்கிறார். இதுதானே இன்றைய நிதர்சனம். ஈழத்தமிழர்களின் இன்றைய வேதனைத் தழும்புகள், அம்பலவன்புவனேந்திரன் அவர்களின் அனைத்துக் கவிதைகளிலும் அழுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக வெளிநாட்டுத் தமிழரின் வாழ்வுநிலை மிகவும் தெள்ளத் தெளிவாக சொல்லுக்குச் சொல் வரிக்கு வரி இன்பத் தமிழாய் இயற்றப்பட்டிருக்கிறது. உண்மையில் உரத்து சிந்தனையின் உத்திகளை வெளிக்காட்டியிருக்கிறார். படித்துப் பயன்பெற நல்ல நூல் என்பதென் கருத்து.

நன்றி

கவிஞர் முகில்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் பறவை பேசுகிறது.......

உங்களுக்கு என் வணக்கங்கள்
இந்தப் பறவை-
உங்களுக்கு பழக்கப்பட்டதுதான்
இரண்டாவது தடவையாக
உங்களின் கிளைகளில் அமர்ந்து
சற்று வித்தியாசமான பாடல்களைப்
பாட பறந்து வந்திருக்கிறது
"தீயின் வார்ப்புக்கள்" பாடியபோது
வாஞ்சையுடன் பலர் வாழ்த்தினர்
வழக்கம் போல் சிலர் வசைபாடினர்
அந்தச் சிலரை இந்தப் பறவை
அலகுகளால் காயப்படுத்தியதா?
இல்லையே- ஒரு வேளை
அவர்கள் இந்த சமூகத்திற்கு
ஊறு விளைவித்திருந்தால்
அந்தப் பாடல்கள்-
அவர்களின் நெஞ்சங்களை
ரணமாக்கி இருக்கக்கூடும்
எது எப்படியோ-
அந்த தாக்கங்கள் யாவும்
இந்த சின்ன பறவையின்
சிறகுகளுக்கு தெம்பூட்டிய
சிறந்த மாத்திரைகள்
இந்த வேளையில்-
பலர் கேட்ட ஒரு கேள்விக்கு
பதில் சொல்ல ஆசைப்படுகிறது
புனைபெயர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்து கொண்டு
கெரில்லாத் தாக்குதல்களில்
ஈடுபடுவதற்கு இந்தப் பறவைக்கு
இஸ்டமில்லாததால்தான்
நேரடியாக பல முகங்களை
முன்னால் நின்று தரிசிக்கிறது
"தீயின் வார்ப்புக்கள்" இரண்டாம் முறை
வலம் வந்த வேளை
இடம் பெற்ற சில தவறுகள்
இந்தத் தடவையும் ஏற்படாமல்
தவிர்த்துக் கொள்ள
உதவிய கரங்களுக்கு
இச்சமயத்தில் இந்த சின்னப்
பறவையின் பெரிய நன்றிகள்
வானத்தின் விழிம்பு மட்டும்
பறக்க ஆசைப்படுகின்ற
இந்தப் பறவைக்கு
உங்கள் ஆதரவுக்காற்றே
போதுமென்று நினைக்கிறது.
அந்தக் காற்றிருக்கும் வரை
இந்தப் பறவை சுவாசிக்கும்
சுதந்திரமாய் சிறகடிக்கும்
இந்த (கவிஞனின்) பாடல்கள்
உங்கள் காதுகளுக்கு வந்துசேர
கொஞ்சம் காலதாமதமாகி விட்டது
சில சூழல் காரணிகளால்
உங்களை விட்டு சற்று விலகிப்பறக்க
நிர்பந்திக்கப் பட்டதில் வருத்தம்
அவ்வேளைகளிலும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வேதனைப் பாடல்கள்
வெளிவராமலில்லை.
அவற்றை நீங்கள்
"இன்னொரு ஜனனத்தில்"
செவி மடுப்பீர்கள்
உங்கள் அனைவரின் கரங்களுடன்
இங்கே அணிந்துரை வழங்கி
ஒத்துழைப்பு நல்கிய கரங்களையும்
இந்தச் சின்னப்பறவை
தன் சிறகுகளால் பற்றி
நன்றியுணர்வுடன் -
கண்களில் ஒற்றிக் கொள்கிறது.

- அம்பலவன் புவனேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : திசம்பர், 1997.

உரிமை : ஆசிரியர்க்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்:

எங்கள் கூட்டில் இருந்து

பறந்த குயில்

கோமளாவுக்கு . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தாய்:

விண்ணிலுள்ள தெய்வங்கள் பலவின்
வியத்தகு சக்தி கொண்டு—இம்
மண்ணிலுள்ள மாந்தருள்ளும் மகிழ்வின்
மகிமைபூண்டு மாதாவின் திருவடிவாய்
கண்ணிலே தோன்றுகின்ற கருணைவடிவு
கள்ளமில்லா நெஞ்சத்தாள் எங்கள் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளையுள்ளம் வேறேதும் சூதறியா
பிள்ளைகளைப் பெற்றெடுத்து-பிறர் போற்ற
வித்தகனாய் இவ்விஞ்ஞான யுகத்துக்கு
புத்தகமும் புரட்சிகளும்படைக்கின்ற உத்தமனாய்
தத்துவச் சுடர்களைத் தரணிக்கே தரச் செய்த
தயாள தயாபரியாம் எங்கள் தாய்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலம் போட்டு
விருப்புடனே அனுப்பிவைத்த இறைவன் பிரதிநிதி
கண்ணுக்குக் காட்சிதரும் தெய்வ வடிவு
கருத்தினிலே கலந்த ஈடில்லாப் பெருநிதி
உண்மைக்கும் உவமைக்கும் இணையற்ற
உருவமாய் வந்தவளே எங்கள் தாய்.

பெண்களிலே உயர்ந்த ஸ்தானம்-குல
பெருமை சேர்க்கும் இனிய கானம்
கண்களாய் மக்கள் மனையை-தன்
கணவன் புகழ் சேர்ப்பதில் நல்ல ஞானம்
எங்கிருந்தோ வந்த பாரதியின் கண்ணனாய்
இருந்திடுவாள் இல்லத்தில் எங்கள் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிமை இனிமை

அடி பெண்ணே
என் காதல்
கருவிலேயே மரித்துவிட்டது
நான் கல்லறையில
காலத்தைக் கடத்துகிறேன். . .
எனக்கு மலர்மாலை வேண்டாம்
மலர் வளையம் கொண்டுவா
நான் முகாரியில் பாடும்போது
மோகனத்தைக் கலக்காதே
சோகராகத்தின் சுருதியைக்குழப்பி
சுகந்தத்தின் சுகத்தைப்
பறித்து விடாதே
பார்வைகளில் பாலைவார்த்து
என் பாலை வனத்தை
நந்தவனமாக்கிட நீ
நப்பாசைப் படாதே
நடந்து வந்த பாதைகளில்
கடந்து விட்டது என் நந்தவனம்
அங்கே ஒருவள்
தீ போல் வந்து
என் காதல் மலர்களைத்
தின்று தீர்த்து விட்டாள். . .
கருகிப்போன காதலுக்காய்
உருகிப் போகவில்லை. . .
உதிரப்போகின்ற இந்த
சருகு வாழ்க்கையில்
எனை ஒத்த உதிரிகளுக்கு
தனிமையின் இனிமையே
போதும் என்று நினைக்கின்றேன். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுந்துவா என்னிடம் . . .

வானுக்குப் பொட்டுவைத்த
வட்ட நிலா வெளிச்சத்தில்
நானும் என் கிராமமும்
நடைபயின்ற மண்ணிது
மறந்தாயோ வங்கக்கடலே. . .?
இங்கே,
இதே மணற் பரப்பில்
பௌர்ணமியில் பவனிவந்ததையும்
நிலாச்சோறு உண்டதையும்
நீக்கமற நிறைந்த
என் கிராமமதை
மறந்தாயோ வங்கக்கடலே . . .?
இங்கே, இவன் குரடனாய்
தினம் தினம் வந்து
தவம் செய்வது கூட
உனக்குத் தெரியலையா
வங்கக் கடலே. . .?
புரையோடிப் புண்ணுக்கு
மருந்து தேடியும்,
மருத்து வர்களாயும்
கரைகின்ற கற்பூரமாக
என் தேச இளைஞர்கள். . .
எங்கள் வானத்திலே
கட்டழுகுகளைக் கொத்தித்தின்ன
வட்டமிடும் வஞ்சக்கழுகுகள். . .
எங்கள் நந்தவனங்களில்
பட்டாளமாய் வந்திறங்கிய
வானரங்களின் அட்டகாசம். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கையாய் இடிமுழக்கம்
செயலற்றுப் போனோம்
செல்லடியால் செத்தவாரயிரம்
சிறகுடைந்த பட்ஷிகளாக
அங்கமறுந்தவர் பல்லாயிரம். . .
எங்குபோவோம் என்ன செய்வோம்
பார்த்திருந்தாயே வங்கக்கடலே. . .
பட்டாலும் கெட்டாலும்
பந்தபாசமிருக்குமென்று
தென்றல் வந்து சொன்னது
தென்னகம் எங்களை அழைத்தது. . .
தேன் கூடுகளாய்
படகுகள் பவனிபோயின
உந்தன் மடியில்
எங்கள் செல்வங்கள்
உந்தன் தலையில்
எங்கள் எதிரிகள். . .
வியட்நாமை நினைத்துக் கொண்டு
வெளியேறிப் போனவர்கள்
தகவலேதும் தரவில்லை
தலைவிதியும் தெரியவில்லை. . .
வங்கக் கடலே
எங்கே என் குடும்பம்
எங்கே என் கிராமம்
எங்கே என் தேசம். . .?
அடிக்கடி அலையை வீசி
ஆத்திரத்தை மூட்டாதே . .
வெடிக்கின்ற நெஞ்சுக்குள்
வெந்நீரை வார்க்காதே. .
கண்ணாமூச்சி விளையாடாமல்
கரைதாண்டி வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாக உள்ளதை
மகிழ்வுடன் ஏற்றுக்கொள். . .
சின்னச்சின்ன சாவுகளால்
சின்னாபின்னமாகிப் போனாம்
என்ன வரப்போகிறது
எல்லோரையும் அணைத்துக் கொள். . .

## நத்தைகள்:

வளருகின்ற உலகத்தில் விந்தையிது—சில
வெட்கமற்ற காளைகளின் சந்தையிது
வரன்களாக விலைபோகும் மந்தைகள்—சிறு
வட்டத்துக்குள் வாழுகின்ற நத்தைகள். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிதாகப் பாடு

இயற்கையை இறைவன் படைப்பினை
செயற்கை உலகைக் கவியால்
செப்புவதில் பயனில்லை
நன்றாக ஈழமது மலர்வதற்கு
நற்கவியாலே வீரமூட்டிப்புது
கவிதைபாடப் புறப்பட்டுவாதோழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியழகை கண்டு மயங்கியததை
காதலில் தோல்வியை தழுவியதை
கவியாக்கித் தருவதில் பயனில்லை
இன்னல்கள் மத்தியில் நாளும்
இடருறும் நம்மினத்தின் விடிவுக்காய்ப்பாடி
படைதிரட்டு என் கவித் தோழா

தலைக்கனத்தை உண்டாக்கும்
தனிமனித புராணம் பாடி-உன்
விலையிலா வித்தையை பாழாக்காதே
நத்தையாய் ஆமையாய்-இனியும்
நம்மினம் வாழாது மீள்வதற்காய்
சத்தான கவியால் சகத்துக்கு வழிகாட்டு

மங்கையிடம் மனதை மறி கொடுத்த
சங்கதிகளால் சகத்துக்குப் பயனேது
இங்கே நம் உறவு இரத்தத்தில் நீந்தும்
இழி நிலையை எடுத்துப் பாடு
எரிகின்ற எம் தேசம் உன் கவியால்
அணைய இனிய கவிபாடு என் தோழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழலை நிஜமாக்கு

நிஜ மாக நினைவாக நிதம்பாடியுந்தன்
நிழலாக அலையாக கரைதேடியின்று
தழலாகத் தனியாகத் தவிக்கின்ற என்னை
தயவாக்கத் தமிழாகத் தருத்தாள வாராய்

கனவாகக் கதையாக நம் காதல்போனால்
களவாக இருளாகக் கலை மாறிப்போகும்
நனவாக நயமாக நீவந்தாலன்றி
நலிவாக மலிவாக உயிரொன்று போகும்

குழலாகக் குயிலாக உன் குரல் கேட்கும்
குரவாக உருவாக என்னுயிர் துடிக்கும்
கனவாக விழலாகக் கரைந்திட்ட பொழுதை
கரமாக வரமாகத்தந்திட நீ வாராய்

மலராகச் சரமாக மணிக்கழுத்தில் சூட்ட
மனதர விரைவாக மலர் பறிப்பேன் நான்
மதுவாக மெதுவாக சிந்துமிதழ் தேன்
மருந்தாக விருந்தாக மாறுநாள் எப்போ ?

நதியாகக் கெதியாக நீயாக வந்தால்
நாளாக நாளாக உனையணைப்பேனே
சதியாகப் பதியாக நாம் வாழ வென்றால்
சரியாக சமமாக மணமேடை சேர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லு! தூது சொல்லு

விண்ணோடு விளையாடும் வெண்ணிலவே
விரைநடத்திங்கு இறங்கியேவா -இரு
கண்ணீரில் கவிபாடும் பெண்ணிவளின்
கண்புகுந்தவன் கதைகேட்டு வா. .

மண்மீதில் வாழுகின்ற மாந்தர்க்கு
மகிழ்வினிலே பாகுபாடு ஏனோ-ஒரு
பெண்ணாக உருவான பேதையர்க்கு
பெரும்பாலும் பெருஞ்சோகம் தானோ. . ?

எண்ணிரெண்டு வயதென்றால் எனக்கு
ஏதும் கவலையில்லையடி -என்
கண்ணிரெண்டின் கதைகேட்டால் உனக்கு
சூழும் கவலையெல்லாம் புரியுமடி. . .

பண்பாடு தமிழர் காதல் வீரமிப்
பாரறிந்த விஷயமல்லவா-இளம்
பெண்பாடும் பாட்டைப் பகிர்ந்தவர்
பெயரைக் காக்கச் சொல்லிவிட்டுவா. .

என் மானம் சிறிதின்று, எம் மானம் தமிழர்
தன் மானம் பெரிதென்று சொல்லு
என் மனம் உருகுதடி அதற்காக-அவ ரின்
நல் மனம் மாற்றிவரச் சொல்லு.

பெண்மானம் காத்திங்கு வாழவென்று
பொருளீட்டப் போனவர் வாராவிடில்
மண்மானம் காக்கப் புறப்படுவேன் -இல்லை
மகிழ்ச்சியுடன் மடிவேனடி போரில். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழைப்பு. . .

இளையவனே எழுந்து வா .
இருதோளும் உரமேற்றி. .
பிழைகளை பிடுங்கிவைப்போம்
பித்தர்களைக் கலைத்திடுவோம்
சத்தமிடும் சாதிப் பேய்களுக்கு
சாவு மணியடித்திடுவோம். .
இந்த உலகம் நமதென்று
எடுத்துச் சொல்ல
எழுந்து வா இளையவனே . . .
பழமையை மாற்றியிங்கே
புதுமைகள் செய்துவைப்போம்
வழமை இதுவென்று
வாதிடும் பழமைவாதிகளுக்கு
வடிவாக பாடம்சொல்வோம் .
உழைக்காமல் உண்போரை
உழவர்களாய் மாற்றிடுவோம்
நிலம் முழுதும் பயிர் செய்வோம்
நித்தியமும்நாமுழைப்போம்
சத்தியத்தை நிலைநாட்ட
சாகும்வரை போரிடுவோம்
சீதனம் கேட்கும் சிறியவரின்
சீரம்கொய்து சீர்செய்வோம்
ஆதனத்து அடிமைகளை
அடைத்து வைத்து திருத்திடுவோம்
சிறிய எம் தேசத்தை
சிதையாமல் பாதுகாப்போம்
இன்னும் செய்வோம்
எழுந்து வா இளையவனே. . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

விடியலை நோக்கும் நெடி தொரு பயணம்
விரைவாய் இங்கே நடக்குது—எதிரியைப்
பொடிப்பொடியாக்கிடும் பயணம்
புதுப்புதுத் தென்பைக் கொடுக்குது.

கொடிதிது என்று விலகியவர் ஓடிட
கொள்கையில் பிடிப்பு கூடுது—அரசின்
பிடியில் பிடிப்பில் பிசாசுகள் சேர்ந்தே
பிச்சையில் நக்கிப் பிழைக்குது.

மடியலும் மரித்தலும் மண்ணுக்கென்றே
மக்களின் சங்கிலி நீண்டது —தமிழரின்
அடிமை மலையை உருட்டி உடைக்க
ஆவேசம் கொண்டிங்கே இறுகுது.

கூட்டத்தோடு கூடி ஓடிய பேய்கள்
குடும்பம் குடும்பமாய் வாடுது—வெளி
நாட்டிலே நாறும் நாய்களில் சில
நம்மீழத்தை மறந்தின்று வாழுது.

முடியும் கொடியும் படையும் என்றே
முத்தமிழ் மன்னர் வாழ்ந்ததுண்டு—ஒரு
முடிவும் முதலும் தமிழீழம் என்றே
முத்துக்கள் பல மண்ணில் வீழுதின்று.

கோடி கோடி ஆண்டுகள் போயினும்
கொழுந்துவிட்ட கொள்கை யணையாது—சிங்களன்
மூடி மூடி மறைத்திட நினைப்பினும்
முகிழ்ந்திடும் தமிழீழம் மறையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நினைவுப்படுக்கை

பூந்தென்றல் பூபாளம் பாடிவரும்–சேர்ந்தே
புதுமாலரின் மணத்தினையும் திருடிவரும்
பாயும் தன் கன்றதனைக் காணும் பசு
பன் மடங்காய் தன் மடியில் பால் சொரியும்
பாய்ந்தோடும் அருவி பாடும் பல்ல வியோடு
பண்பாடும் இவள் இன்னும் ஈழத்தில்.

புகைமூட்டமாய் வெண்பனியின் போர்வை–ஏதும்
புரியாமல் அதனூடே அணிலின் பார்வை
நகைப்பூட்டும் மந்தியினம் பல்லிளித்தே
நடைபாதை மரங்களெங்கும் தாவியோடும்
மிகையான மகிழ்ச்சியிலே நெஞ்சம் போடும்
மெல்லிய லயத்தோடு இவள் இன்னும் ஈழத்தில்.

இனிக்கின்ற காலைப் புலர்வின் மகிழ்வோடு
இளைய புள்ளினங்கள் இன்னிசைபாடும்
பனிக்குடம் சுமக்கின்ற புல்வெளிகள் –காதலால்
பகலவனைக் கண்டு கண்சிமிட்டும்
தனிமையில் காண்கின்ற இனிமையில்–மூழ்கித்
தவித்திடும் இவள் இன்னும் ஈழத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுகட்டில் மோகங்கொண்டே-மேகங்கள்
மயங்கி இறங்கித் தழுவிக் கொள்ளும்
மாலையாய் சரமாய் மாறுவதற்கு-மலர்கள்
மகிழ்ச்சியில் அதிகமாய் மது வினை சுரக்கும்
மதுவுண்ண வண்டினம் படையெடுக்கும் காட்சியில்
மங்கையிவள் இன்னும் ஈழத்தில்.

பட்சியினம் கட்சியின்றிப் பேசிக்கொள்ளும்
பகல் வந்தால் வயல் ஒன்றை நாடிச் செல்லும்
உச்சியில் பகலவன் வரும் வரைக்கும்
உழவரின் உழைப்பெல்லாம் களனியில் சேரும்
இச்சையில் இசை கூட்டி குயில்கள் பாட்டில்
இசைந்திட்ட இவள் இன்னும் ஈழத்தில்.

துடிப்போடு பள்ளிச்சிறார் படையெடுப்பர்
துள்ளிக் குதித்தே புத்தகங்களை அள்ளிப்போவர்
துடுப்போடு வலைஞர்கள் கடல் நேக்கி
துணிவோடு பாடல் பாடிப் பயணிப்பார்
களனியிலே பெண்களும் பாடிக்களையெடுக்கும்
காலைக் காட்சியுடன் இவள் இன்னும் ஈழத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவுவரும்

வான் மீது நீந்தும்
மேகமானேன் நானே
வருந்துயர் எல்லாமே
வருந்தி வரவேற்றேனே
கானகத்தில் தவறிய
கன்றாகிப் போனேன்
கருகிய நினைவுகளில்
கலந்துவிட்டேன் நானே
மானிடத்து மகிழ்ச்சியிலே
மருண்டு போனேனே
மற்றவர்கள் துயர்துடைத்து
ம. ங்கிப்போனேன் நானே
தொற்றிக் கொண்ட கவலைகளில்
தொல்லை கொள்ளலானேன்
துன்பத்தின் துயிலிடத்தில்
துகில் வாங்கினேனே
அலைகடலில் சிக்கிய
அரும்பாகிப் போனேன்
அருவருத்துப் பிறர் பார்க்கும்
பொருளாகிப் போனேனே
விருப்பு வெறுப்புகளை
விலக்கிவைத்தேன் நானே
விடியல் ஒற்றுக்காகத்தானே
விழிப்புக் கொண்டேனே
விருப்பம் அது வென்றே
வெளியில் சொல்வேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனவுத்தொல்லை

நின்னையே ரதியென்ற வார்த்தை மாறிற்று
நின்னையே உயிரென்ற உணர்வு உக்கிற்று
நின்னையே கவியென்ற காலமும் காரிகிற்று
இன்னுமேன் என் கனவுகளில் வருகிறய்...?

நின்னையேநிறைத்த இடமும் அற்றுப்போயிற்று
நின்னையே நினைத்த மனமும் இப்போமாறிற்று
நின்னையே துய்த்த இதயம் என்றோ மரித்திற்று
இன்னுமேன் இவன் கனவுகளில் வருகிறாய்?

நின்வதனமே மறைந்து பல வருடமாயிற்று
நின்மொழிக் கவிதைகள் கரைந்து காலமாயிற்று
நின் நினைவுகள் நிழலாய் உன்னோடு போயிற்று
என் கனவுகளில் மீண்டுமேன் வருகிறாய்?

நின்வார்த்தைகளோ வரம்பின்றி என்றோபோயிற்று
நின் வருகையிலும் வறுமை வரவரக் கூடிற்று
நின் பாத்திரமே மாய நாடகமாய் ஆயிற்று-ஏன்
என் கனவுகளில் வந்து தூக்கத்தை கலைக்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு சுவருக்குள்

நாட்களை வெட்டியாக விரையமாக்க
நான் ஏன் இங்கு பறந்து வந்தேனோ
என் விதியை எந்நாளும் நொந்தபடி
நான் இங்கு நான்கு சுவருக்குள்.

'பம்பர்' குண்டு என்றும் 'செலி' என்றும்
பனைமரத்தைத் தொட்டுதாளப்பறக்க
பம்மாத்து விளையாட்டுக் காட்டாமல்
பயத்தினால் பதுங்கியதும் நான்கு சுவருக்குள்.

சுடலைக்காவலராய் 'ஆமி' வரும் போதும்
சுற்றிவளைப் பன்றின் சுழற்சியிலும்
சும்மாவேனும் தலையை நீட்டா வண்ணம்
அம்மா என்னை அடைப்பதும் நான்கு சுவருக்குள்.

தானுண்டு தன் தொழிலுண்டு என்று
தாயகத்தில் தலை நிமிர்ந்து வாழ்ந்ததுண்டு
தார்மீக அரசதுவின் தார்ப்பரியத்தால்
பயங்கர வாதி என்று பெரிதாய் பச்சைகுத்து.

வெலிக்கடை முகாம் பூசா என்று
வெளித் தெரியாத வாழ்ந்த பல்லாண்டுகள்
நாவடைத்து கைகட்டி நானங்கு நலிவுற்று
நாட்களைக்கடத்தியதும் நான்கு சுவருக்குள்.

அஞ்சியோடி அமைதிதேடி தஞ்சம் என்று
அலைகடலைத் தாண்டி வந்ததும்
மிஞ்சி மிஞ்சிப் போன தெல்லாம்
மிகையான நான்கு சுவர் வாசமேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு சேதி

தென்றல் தொடத் தேகம் சிரிலிர்த்த நாள் போனது
தெரியாத கருவிகளைத் தேடி மனம் துடிக்கிறது
தேர்கள் எரிந்திங்கு தெய்வங்களும் போனது
தெள்ளுதமிழ் தேசம் தெரியாமல் தேய்கிறது
ஏர் உழுத நிலமெல்லாம் எரியுண்டு போனது
எங்களது தேசத்தை எப்போதத்தான் மீட்பது.

காலையிலே பூத்தமரம் கருகி எரிகிறது
கண்ணிவெடிவைக்க என் கைகள் துடிக்கிறது
மாலைவேளை வந்தாலே மனம் கொதிக்கிறது
மறு நாளின் விடிவதனை மரணபயம் தடுக்கிறது
வேலைதேடிப் போனநீங்கள் வருவதெப்போது
வெளிநாட்டில் வாழ்பவர்கள் விரைந்து வருவதெப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத வெறியர்களின் பேயாட்டம் நடக்குது
பொட்டிழந்து பூவிழந்து பெண்கள்குலம் மடியுது
எல்லைப்புற நகரங்களில் ஏதேதோ கேட்குது
எருமைகளின் கூட்டமாய் குடியேற்றம் நடக்குது
பொருளீட்டப் போனநீங்கள் புறப்பட்டு வருவதெப்போது
பொன்னான எம் மண்ணை மீட்டெடுத்து தருவதெப்போது.

பதுங்குகுளியான இடம் பாசறையாய் மாறுது
பகல் பொழுதில் மட்டும் சனம் பாதுகாப்பைத் தேடுது
ஒதுங்கிவாழ நம்மினம் ஒவ்வாது வெறுக்கிறது
ஒப்பந்தம் செய்ய அரசு ஒப்பாரியாய் பாடுது
வெம்பி வெதும்பி வெட்டியாய் எத்தனை நாள் வாழ்வது
வேரோடு பகையழிக்க எப்போதத்தான் வருவது?

சோகத்தைச் சொல்வதற்குச் சொந்தமின்றிப் போனது
சோறின்றி நாள் பலவாய் சோர்வாகக் கழியுது
தேகத்தில் மட்டும் புதுத்தென் பொன்று நிலைக்குது
தெய்வத்தை நம்பியது தேவையற்றுப் போனது
வாரத்தில் முழுநாளும் வழியை விழிபார்க்குது
வருவார் அத்தான் என இவள் மனது துடிக்குது.

அடிமையாய் வாழ்ந்தகாலம் அடிபட்டுப்போனது
அடிவருடிக் கூட்டங்களும் அழிந்தொழிந்து போனது
கொடிகட்டி வாழ்ந்தகாலம் கொஞ்சநாளில் வருகுது
கொள்கையிலே பற்றுக்கொள்ள இவள் மனமும் நாடுது
முடிவாக ஒன்றைச் சொல்ல முடியாது உள்ளம் துடிக்குது
பிடிபட்டால் என் கழுத்தில் குப்பியொன்று இருக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்ந்துகொள்.

விலைபோகும் ஆண்மகனே—நீ
விலைமகனாய் ஆகிவிட்டாயே
சிலையொத்த பெண்ணோடு வாழ
சில்லறை கேட்கிறாயே
கலை கலாச்சாரம் பண்பாட்டை—நீ
கடுகளவும் எண்ணிடாமலே
விலைமகனாய் மாறியதாலே
வெட்கித் தலைகுனிகிறேனின்று.

வங்கிக் கணக்குகளையும்—நல்
வளமான சொத்துகளையும்
தங்கி வாழ வீடுவாசலுடன்
தங்கத்தின் தரம்பார்க்கும்—நீ
மங்கலம் நிறைய வந்தவளை
மகிழ்வுடன் வாழவைப்பாயா—இல்லை
பொங்கிப் போட அவளை வைத்து
பொய் வாழ்க்கை வாழ்வாயா?

காதலித்து கன்னியரை மயக்கிவிட்டு
காசுதந்தாலே தாலியேறுமென்று—மனம்
பேதலித்து உளறுகிறபோது
காதலங்கே இறந்தல்லவா போகிறது
காசுக்காய் அலைகின்ற காமுகனே
காதலுக்கு அர்த்தம்தான் புரியுமா?
காதலிலே காதலது உயர்கிறது—நீ
காதலைச் சாகடித்து உயர்கிறாயா?

உன்னோடு சீதனம் முடியட்டுமே
உண்மை இளைஞர்கள் உணரட்டுமே—இம்
மண்ணின் பிணியொன்று மறையட்டுமே
மகிழ்ச்சியால் கன்னியர் பாடட்டுமே—இல்லை
உன் மகளின் சீதனதுக்கு நீஅலைவாய்
உறக்கமும் நிம்மதியும் நீ மறப்பாய்
பெண் கேட்கும் இளைஞரை வெறுப்பாய்—இப்
பெரும் பிழையை அப்போது நீ உணர்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலையற்ற நிலை

சங்கம் வளர்த்த தமிழர் நாங்கள் என்போம்
சங்கமிக்கும் போதினிலே 'டொச்சில்' கதைப்போம்
எங்கள் வீட்டு பிள்ளைக்கும் தமிழை மறப்போம்
எதிர் வீட்டு 'ஜேர்மன்' காரனைப்போல நடப்போம்.

வந்தகாலம் வாழ்ந்து செய்த சாதனைகளை
வடிவான 'போட்டோவாக்கி 'போஸ்டில்' அனுப்புவோம்
இந்தமாதிரி சொந்த வாழ்க்கை வாழாதவன்
எதற்கும் உதவாதவன் என்றொதுக்கி வைப்போம்.

தண்ணியடி விளையாட்டுப் போட்டிகளும் வைப்போம்
தள்ளி நின்று பார்ப்பவரைச் சேர்த்து அரவணைப்போம்
எண்ணிரெண்டு நாளில் பெருங்குடிமகனாய் மாற்றும்
எண்ணற்ற வித்தைகளை அவருக்கும் சொல்வோம்.

இங்கு மங்கும் ஓடியே இரண்டுவேலை செய்வோம்
இரண்டு வேளை உணவை ஒன்றாக்கிக் கொள்வோம்
தங்கத்தை தகதகக்க அங்கமெங்கும் அணிவோம்
தரம் பார்த்துப் பெண்ணெடுக்க தரகரை அழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் ஐந்துலட்சம் போடுமாறு செய்வோம்
வடிவில்லை என்றால் இன்னும் அரை கேட்போம்
வங்கக்கடல் கடந்து வருகின்ற பெண்ணிடம்
சங்கிலியும் சட்டைத்துணியும் எடுத்துவரச் சொல்வோம்.

இங்கு நாங்கள் புரிந்துவைத்த தில்லுமுல்லுயாவும்
இலங்கைவரைப் போகாமல் இடையினிலே தடுப்போம்
அங்கிருந்து வரும் பெண்ணாள் பிறந்த நாள் தொட்டு
அடுக்கடுக்காய் செய்தவற்றை ஆள்விட்டுக் கேட்போம்.

சங்கதிகள் அறிந்தவள் சண்டையேதும் செய்தால்
சத்தமேதும் வராமல் அறையில் வைத்து அடைப்போம்
பொங்கிவைத்து பொழுது முழுதாய் காத்திருக்குமவளை
பெ டியன்கள் கண்ணில் படாது பூட்டிப் பாதுகாப்போம்.

கற்றதையும் மற்றதையும் கடுகளவும் நினை யோம்
கடல்தாண்ட முன் வாழ்ந்த வாழ்க்கையையும் நினை யோம்
சுற்றிவருகின்ற செக்கு மாடொன்றாகத் தினமும்
செய்த வினையனைத்தையும் புதிதாகச் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைமாறு

உயிரோடிருக்கும் போதினிலே
உயிலெழுதும் மானிடனே
ஊர் சொல்லுமுன்னரே -உன்
பேரை ஏன் கொல்லுறாய். . . ?

பயிர் வளர்த்தவன் எங்கோ
பசித்திருக்கும் வேளையிலே
பணங்கொடுத்து விட்டு-நீயிங்கு
பசியாறுவது எப்படி . . .?

கடலோடி வலைவீசியவனோ
கரைவந்தே கவலை மறக்க
உடல்வியர்வை காணாத-நீ
ஊமார எப்படி மகிழ்கிவாய். . .?

முடிசூடும் மன்னானாயினும்
முடிதிருத்த ஒருவன் தேவை
பிடிசாம்பலாகும் முன்பே-உன்
பிடிவாதத்தை விடுவாயா. . .?

சும்மா இருந்து விட்டு
சுயசரிதம் எழுதுகிறாயே
இம்மானிலத்துக்கு ஏது செய்தாய்
எப்போதாவது எண்ணினாயா. . .?

கைமாறாக எதையும் எதிர்பார்த்து
கைநீட்டிப் பழகிப்போனாய்-உன்
அம்மாவின் தாய்ப்பாலுக்கு
எதை(நீ)கொடுத்து நிறைத்தாய். . .?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தவமும் வரமும்

விழி வழி
கண்ணீர் விடைபெறட்டும் . . .
விழிகளில்
பார்வைக்கு வழிவிடட்டும் . . .
உடைந்து போன
கண்ணாடியாய் இவன் மாற
யார் பொறுப்பு . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தின் தேய்வு
தேவதை இவளிடமா குடியிருப்பு
தெய்வத்தின் பார்வை
இவளுக்கு ஏன் மறுப்பு . . .
இவள் இன்று
மெழுகாய் உருகுதற்கு
யார் பொறுப்பு . . .
உருக்குலைவு என்பது
இவள் உருவில் பிறந்ததா
பாவத்தின் தண்டனையா இது?
தனிமை இவளுக்கு
பரிசளிப்பாய் கிடைத்ததா?
ஓ. . .
இது ஒரு வகை தவம்
இரவும் பகலும் தொடரும்
இவளின் தவம் நீண்டது
கண் புதைந்தவன்
இவள் கண்முன்னே
தோன்று வரைக்கும்
அது நீளும் நிலைக்கும் . . .
ஆனல்,
இந்தப் பாவிப் பெண்ணோ
அவனின் கதையை
அறிய நியாயமில்லை.
ஏனென்றால்.
இவள் கண்ணாளன்
கண் காணாத உலகில்
சஞ்சரித்து விட்டானே . . .
பேதை இவள்- அவன்
பேரை வேதமாகவல்லவா
உச்சரித்துக் கொண்டிருக்கிறாள். . .
இறைவன் இவளுக்களித்தது
பெரும் சாபமா?
சாபம்—
தவம் செய்பவர்க்கு
வரமான தெப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனயாகம்

துனிமையில் இந்துமயில் துவிக்குது
துலைவனை எண்ணிப் பரிதவிக்குது
இனிமையைத் தேடிநிதம் வெதும்புது
இறைவனை வேண்டியிங்கே துதிக்குது.

புயலொன்று வீசியிங்கே போனது
புள்ளினம் ஒன்றையொன்று பிரிந்தது
கயல் கொண்ட விழியிங்கு கலங்குது
கண்களிலே கானலைச் சுமந்தது.

நாளும் நாளும் நாயகனை நினைக்குது
நாவினிலே அவன் பெயரே நிலைத்தது
பாழும் கொடும் விதியை மனம்சபிக்குது
பாவை வாழ்வோ பாலைவனமானது.

சோதனைகள் இவள் சொந்தமானது
சொல்லொனாது பேதைமனம் வாடுது
வேதனைகள் உள்ளமதை வாட்டுது
வெம்பிய ந்து வெள்ளைப் புறாவேகுது.

கடலலையாய் நினைவுகரை புரண்டது
காலங்கள் கனிந்து வரக் காத்திருந்தது
மடல்வேண்டி மகிழ்ச்சியை அடைகாத்தது
மங்கையுள்ளம் உறவுக்குத் துடிதுடித்தது.

இங்கு மீண்டும் வசந்தம் வரப் பாடுது
இடைவெளி விலக்கியோட வேண்டுது
சங்கொலி கேட்க மனம் இரங்குது
சடைபின்னிப் பூச்சூட விரும்புது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாசிப்பு:

ஏ போராளியே
சீதனமில்லாமல்—தன்
புகுந்தவீடு போகின்ற
என் பெண்ணுக்கு
உன் 'சயனைட்'குப்பியைத்
தந்துவிட்டுப்போ. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறுவாயோ குயிலே

சோலைக்குள்ளே சுகமாக அமர்ந்திருந்து
சோடியுடனே பாடும் குயிலே—எங்கள்
சாலையிலே நடக்கின்ற சச்சரவை உணராது
சந்தோஷமாகப் பாடுவது உனக்கு நியாயமா?

யுகமொன்று புலர்ந்தது என்று
யுத்தங்கள் மெல்லத்தணிந்து—தமிழர்
சகமெங்கும் சந்தோஷப்படும் வேளை
சஞ்சலம் மீண்டும் வந்ததை நீ அறிவாயா?

ஆசனங்களே குறியென்று அரசுக்கு வந்தவர்
ஆள் பிடித்து படையமைக்கும் ஆசையினால்—புதுச்
சாசனங்களால் நாட்டைச் சாகடிக்கின்ற
சதித்திட்டமதை சகமெங்கும் நீ கூறுவாயா?

வாக்குறுதியை வாய்நிறைய வைத்துக்கொண்டு
வாழ்வுக்கு வழியேதும் வரைந்திடாமல்
சாக்காடாய்த் தமிழ் மண்ணையாக்குதற்கு
சந்தர்ப்பம் பார்த்து இருக்கின்றாரோ?

பள்ளிச் சிறாரைக்கூடப் பிடித்து அடைத்து
பகடைக் காய்களாய் பலியிட்டு—தேசத்தை
பாழ்படுத்திப் படுகுழியில் தள்ளுகின்ற
பரிதாபக் கதையை பாரெங்கும் நீ பகிர்வாயா?

பலவந்த ஆட்சிக்கு வந்த கூட்டமதன்
பகட்டுவார்த்தைகளை மறுப்போர் தனை
சகட்டுமேனியாய் சடுதியாய் தாக்கியிங்கே
சாக்காட்டுக்கு அனுப்புவதை நீ அறிவாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில் வேண்டும்



வாரம் ஒரு வரம்தர
வருகின்ற தேவதையே
தாரம் இவனுக்கென்று—நீ
தராதரம் பார்க்கிறாயா?
ஓரம் பார்க்குமுன் விழிகள்
ஒதுங்கி நிற்பது மேன்?
பாரம் தாங்கிடாத கூந்தல்
புஷ்பத்தால் படர்வதை
நானும் பார்க்கிறேன்தானே. . .
நேரம் வரும்வரை
நினைப்பில் இருக்கவிடாத
ஈரப்புன்னகைக்காய்—இவன்
எப்போதும் ஏங்குகிறான். . .
வீரம்காட்டி விளையாட
வீட்டில் இடமில்லை –
விட்டிலைப்போல் சுற்றுகிறேன்
விடையொன்று தருவாயா?
கட்டிலுக்கும் தொட்டிலுக்கும்
கரம்பற்ற ஆசையில்லை. . .
கட்டழகில் மயங்கியி ந்த
காளையிவன் வீழவில்லை. . .
பொட்டுவைத்து பூமுடித்த
கட்டான பெண்ணொருத்தி
வீட்டில் விளக்கேற்ற வென –
என்னை பெற்றவள்
எந்நாளும் கேட்கிறாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம் இதை—எப்படி
சொல்வதென்று தெரியாது
விடிகாலைப் பத்திரிகையில்
விளம்பரம் கொடுத்திருக்கிறேன்
படித்துப் பார்த்துப் பதில் தருவாய்
அதில் என் தாயின்
மகிழ்ச்சியையும் தருவாய். . .



## உளது கவனத்துக்கு

இடியலவோ விழுகுதங்கே
இனமல்லோ அழியுதங்கே
துடிப்பெதுவும் தெரியவில்லை — இதை
துளிகூட உணர்வாரில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரத்துக்கொரு சினிமா
வண்ண வண்ண உடுதுணிகள்
காரத்துடன் உணவுமுண்டு—உனக்கு
களவாக வேலையுண்டு.

பறந்து வந்த நாட்களிலே
பல்லவியாய் பாடினாயே
மறந்து போன மாயமென்ன—நீ
மண்ணை மறந்து வாழ்வதென்ன?

இந்திய இராணுவம் ஓய்ந்தது
இலங்கை படைகளும் சாய்ந்தது
முந்திய சங்கதி தொடருது—மீண்டும்
மூழ்தாய் ஈழமோ அழுகுது.

செல்லடியாலும் சிதறு வெடிகளாலும்
செத்துக் கொண்டிருக்குது தமிழினம்
கல்லுளி மங்கனாக இருக்காதே—வீண்
கதைகளில் பொழுதைக் கழிக்காதே . . .

கண்முன்னே நின்றதேசம்
காணாமல் போகுதங்கே
எண்ணியிரண்டு வருஷமில்லை—நீ
எப்படியடா மாறிப் போனாய். .?

சொந்த பந்தம் மறந்து
சொர்க்கமிதுவென்று எண்ணாதே
வந்த வழியைத் திரும்பிப் பார்—பின்
வருகின்ற சந்ததியை நினைத்துப்பார்.

சங்கதியறிந்து விழித்தெழு
சன்னதங் கொண்டங்கே புறப்படு
எம் கதி இனிமேலும் தொடராது
எப்படியும் தமிழீழம் தவறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையும் தேகமும் தேசமும்

நோய் நொடி என்று நான் நொந்து கிடக்கிறேன்
நோகாமல் உனைவளர்த்தாளாக்கிவிட்டவுன்
தாயும் எத்தனை நாள் தவமிருந்தாள் உனக்காக
பாயில் கிடந்தும் உன் பலகதைகள் சொல்லிப்போனாள்.

பார்வையில் பாதி பறிபோய் நாட்கள் பலவாயிற்று
பார்க்கத் துடிக்கின்றேன் உனைமட்டும் தானே
நாராய் என்னுடல் நலிந்து குலைந்திற்று
நல்லுறுதியாய் இருக்கிறேன் உனைக் காண்பேனென்றே.

நடைதளர்ந்து நாட்கள் கோடியானதடா—மகனே
நானின்னும் உனைத்தேடி நாளும் நடக்கின்றேன்
கடைவழிப் பாதை தெரியும் வரை — நா ன்
காத்திருப்பேன் உனக்காய் கண்டிப்பாய் வந்துவடு.

பெற்றதாயைவிட தாயகமே பெரிதென்ற
பெரியதத்துவத்தை தரணிக்கு நீ சொல்லலாம்
உற்றார் உறவினர் உடன் பிறப் பெதுவுமின்றி
உழலுகின்ற தந்தையை ஒரு தரம் வந்து பாராயோ.

பாஸிஸ்கரங்களால் மாண்டோர் பல்லாயிரம்
பாரிஸவாதத்தால் பலர் படுத்த படுக்கையாயினர்
பயங்கர நோயினாலும் பாடையில் பலர் போயினர்
பாவி நான் உனக்காக படுக்கையில் நாட்களை என்னுகிறேன்.

தேசத்துக்கு சேவை செய்ய (வென்று)செருக்களம் புகுந்தாயே
தேவை நம் விடுதலை என்று தேசங்களுக்கு சொல் மகனே
தேகத்தைக் களத்தில் விட்டு தேவலோகம் போனாயோ
சேதி சொல்லயாருமில்லை காத்திருக்கேன் என் மகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன் பெயர். .

எனக்கு நீ
பணங்கொடுத்தால்
வேதனம்
உனக்கு நான்
பணங்கொடுத்தால்
அது சீதனம்
எனக்குப் பெயர்
விலைமகள். . .
உனக்குப் பெயர். . ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கு கொள்வோம்

தோழி தோள் கொடுக்க வா நீ
தொடர்கதையாம் விடுதலையின்
தொடக்கத்தை படித்துப்பார் நீ
தொடராமல் முடித்து வைப்போம்
துடிப்புடனே விரைந்து வா நீ
தொட்டதை துலங்க வைப்போம்
துன்பங்களைத் துடைத்தெறிய
துப்பாக்கியேந்துவோம் வா நீ.

முரசறைந்து போர் தொடுத்து
முடிசூட்டி வாழ்ந்த பரம்பரை
முறத்தாலே வேங்கை கதை
முடித்தவளாம் நம் மூதாதை
முழுமையாக முயற்சி செய்தால்
முடியாதது எதுவுமில்லை
முழுமனதாய்ப் பெண்கள் வந்தால்
முந்தியே கிடைக்குமடி விடுதலை.

பாரதிக்குப் பாடல் செய்வோம்
பார்போற்ற பேர் எடுப்போம்
சாரதியாய் நாமே ஆவோம்
சகலத்தையும் நாமே செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோறு பொங்கிப் போடும் வாழ்வை
சுத்தமாக நாம் எதிர்ப் போம்
வீறு கொண்டு எழுந்து வாநீ
விடுதலையை வென்று வருவோம்.

தாய் மண்ணை மீட்டெடுக்க
தாய்க்குலம் வருவதில் தவறேது
வாய் வார்த்தைகள் போதாது
வந்து குதித்திடடி களத்தினிலே
நோய்என்று பாயில் விழும் பாழுடல்
நாட்டுக்காய் களத்திலே வீழட்டுமே
நம் தேசவிடுதலை நம்மால் கிடைக்கட்டுமே
நாளை நம்சரித்திரத்தை நாடே படிக்கட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞன்

பாடுபடும் மக்களைப் பாடுபவன் நான்
பழந்தமிழ் இலக்கியத்தை தேடுபவன் நான்
நாடுபடும் பாட்டையின்று சாடுபவன் நான்
நலமாகத் தமிழன் வாழப்பாடும் கவி நான்.

கூட்டைவிட்ட குருவியாகப் பறப்பவன் நான்
குழந்தையுள்ளம் கொண்டவரைத் தேடுபவன் நான்
சாட்டையாகப் பாட்டெழுதிப் பாடுபவன் நான்
சமூகத்துக்கு சங்கதிகள் சொல்லும் கவி நான்.

திங்களதை மங்கைக்காய் திருத்துபவன் நான்
திரைபோடும் மேகங்களை நிறுத்துபவன் நான்
கங்கையைப் போல் பொங்கி எங்கும் ஓடுபவன் நான்
கரையாத சீதனத்தைக் கரைக்கும் கவி நான்.

கற்பனையில் காலமெல்லாம் வாழ்பவன் நான்
கனவுகளைக் காதலிக்கும் கைக்குழந்தை நான்
நற் செயலைச் சொற்களிலே செதுக்குபவன் நான்
நனவாக நாள் முழுதும் உழைக்கும் கவி நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களை எழுத்துக்காளல் உழுபவன் நான்
உதவாத உறவுகளை கழுவுகிறவன் நான்
கள்ளமில்லா நெஞ்சுடனே கலப்பவன் நான்—மனக்
கதவுகளைத் திறந்துவிடும் இனிய கவி நான்.

கோல்கொண்டு கோடேறும் நீதிபதி நான்
கோபது பாவமென்று கூறுபவன் நான்
காலூன்றி கருத்துக்களை விதைப்பவன் நான்
கவிதையாலே உலகையாளும் கவியரசன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை மகன்

போருக்குப் போய் மீண்டும் வென்று—தமிழர்
பெயரைக் காத்திடுவேன் என்ற மகன்
தேர் மீது பவனியாய் வருகிறான்—நெடிய
தெருவினிலே ஊர்வலமாய் வருகிறான்.

யாருக்கும் அஞ்சியிங்கு நில்லோம்—கொடும்
யமனையே ஒருகை பார்ப்போமென்று
ஊருக்குச் சொல்லிப் போனமகன்—நீண்ட
உறக்கம் கலையாதின்று வருகின்றான்.

வேருக்கு நீர்தேடி வெளியேறிப்போனவன்—மக்கள்
வெள்ளமாய் புடைசூழ வருகிறான்
வெள்ளையுள்ளம் கொண்டவொருமன்னன்
வெள்ளைத்துணி சூட்டி வருகிறான்.

மார்பகத்தில் வேல் வாங்கியங்கே—தூய
மகிழ்ச்சிதனை உள்வாங்கி வருகின்றான்
மறவர்களின் வரிசையிலே சேர்ந்திங்கு—நறு
மலரணையில் பவனியாய் வருகின்றான்.


மற்றவர்க்கு மகிழ்ச்சிதனை வாங்கிவரத்—தான்
மகிழ்ச்சிகளை அடகு வைத்துப் போனவன்
கற்றவர்க்கும் பாடம் சொல்லி வருகின்றான்—என்னை
கவிதை எழுதி அழவைத்தே வருகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறகுகள் வேண்டும்

சிரிப்பைத் தொலைத்து
நெருப்பைச் சுமந்து
சிறையில் வாடுகிறேன் . . .
வெறுப்பில் வெடிக்கும்
இதயத்தைக் காட்ட
சிறகுகள் வேண்டும் எனக்கு . . .
சிறையின் அறையில்
சித்திரவதைக்குள்
சிறு பிறையானே நான் . . .
மறையாக இன்று
மாறிய ஈழத்தை வெல்ல
சிறகுகள் வேண்டும் எனக்கு . . .
குறைப்பிரசவ கூட்டத்தை
முறையாகப் படிப்பிக்க வேண்டும்
உறையாத தயிராய்
உயிருடன் போராடும்
உள்ளத்தை உருவேற்ற
சிறகுகள் வேண்டும் எனக்கு. . .
நீர் வற்றிப் போனதாலே
தமிழீழ மெங்கும் வெடிப்பு
நீர் வார்க்கத்துடிக்கிறேன்
சிறகுகள் வேண்டும் எனக்கு. . .
கண்ணீர் வார்த்து-குருதி
கறையைக் கழுவுகிறேன்
வெந்நீர் சுமந்து
வேகுகின்ற தேகங்களை
ஆற்றிவிட-ஆறவிடுவதற்கு
சிறகுகள் வேண்டும் எனக்கு . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீயும் நானும்

நீ இங்கு வந்த அந்நேரம்—அன்பே
நிலைமாறிப் போனேனே நானே
நீங்காத பாரம் ஒன்றென் நெஞ்சில்
குலைந்தோடக் கண்டேனே நானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் மீது நீந்துகின்ற மதியாக—நீயும்
வந்திங்கு சேர்ந்தாயேதாயே
வளங்கொண்டு சொரிந்து மீளும்
வர மொன்று தந்தாயே தாயே

எனக்காக வென்று எழுந்தகலைவடிவே
உனக்காக வென்று உயிர் வாழ்ந்தேனிங்கே
கணக்காகத்தானே காதலிலே கழித்தோம்
கனவுகளில் வாழ்ந்து நனவாக சேர்ந்தோம்

சொந்தங்கள் பந்தங்கள் சூழட்டுமங்கே
சொர்க்கத்தின் கதவுகள் திறக்கட்டுமிங்கே
இன்பமும் இனிமையும் வழிந்தோடும் வேளை
இயலோடு இசைபாடு என்னிள மானே.

பாதியுயிராய் நின்று பரிதவித்த—எனக்கு
மீதியுயிர் தந்து மீட்பித்தமாதே
போதுமினி இன்பமென்றாகும் வரையில்—முழு
பொழுதுமினிக் களித்திருப்போம் மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை வேண்டும்

வாழ்வில் வரும் துன்பம் விலகிட வேண்டும்
வராத இன்பமெலாம் வந்துசூழ வேண்டும்
தாழ்விலே கலங்கிடாத நல்மனம் வேண்டும்
தருமம் செய்திட தனம் சேர வேண்டும்.

வளரும் இவ்வுலகின் வளம் பெருகவேண்டும்
வழமான நல்வாழ்வு அனைவருக்கும் வேண்டும்
தளரும் வன்முறைகள் விலகிவிட வேண்டும்
தளராத நெஞ்சுறுதி தந்தருளவேண்டும்.

சொந்தமண்ணில் யாவருக்கும் சுதந்திரம்வேண்டும்
சுகமோடு அனைவரும் சேர்ந்து வாழ வேண்டும்
எந்த சக்தி வந்தாலும் இணைந்திட வேண்டும்
எதிரிகள் இல்லாவாழ்வு எவருக்கும் வேண்டும்.

பந்தபாசங்களில் இருந்து விடுதலைவேண்டும்
பசி பிணி வாராது பார்த்தருள வேண்டும்—எனக்கு
இந்த உலகில் இருந்து விடுதலை வேண்டும்
இனிமேலும் பிறக்காமல் விடுதலை வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அழியாத கோலம்:

விடிவுக்காய் எழுந்த கதிர் வீழ்ந்ததம்மா
விடிவெள்ளி தோன்று முன்னே மறைந்ததம்மா
கொடியவர்கள் சூழ்ச்சியாலே சாய்ந்ததம்மா
கொண்டகொள்கை மாறிடாத புலிதானம்மா.

வெஞ்சாமரில் வேள்விகளை செய்துநின்றாள்
வெற்றிகளை மாலையாக அணிந்து கொண்டாள்
வஞ்சமில்லா நெஞ்சுடனே வாழ்ந்தாளம்மா
வாழ்வுக்கே பாடம்சொல்லிப் போனாளம்மா.

அஞ்சியினம் வாழநெஞ்சு கொதித்து நின்றாள்
அடிமை விலங்கொடிக்க வந்து அவதரித்தாள்
நெஞ்சில் உரம் ஏந்தியெங்கும் சுழன்றடித்தாள்
நெடும்பயணம் முடித்தவள் எங்கே போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோறூட்டிப் பார்த்தகைகள் காயலையே
சொந்தங்களின் நெஞ்சில் நின்றும் மாறலையே
பாலூட்டி மகிழ்ந்த உள்ளம் வேகுதிங்கே
பயணப்பட்டு நீயெங்கே போனாயம்மா.

உண்டு மகிழ்ந்துறங்கியது படமாய் ஓடும்
உடன் பிறப்பு நெஞ்சுகளில் நிறைந்தே ஆடும்
ஒன்றாக வாழ்ந்தகாலம் ஓடி மறைந்ததே
ஒவ்வொரு நாளுமிங்கே கண்ணீர் ஊர்வலமே.

ஆண்டுகள் அவசரமாய்ப் போனதம்மா
அவள் நினைவோ அழியாத கோலமம்மா
கன்றொன்று தாயையிங்கே பிரிந்ததம்மா
ககனவழி அதுதான் என்று அறியோயம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்படுவோம்

கதை கதையாய் அளந்து
காலம் கரைந் து போனது—நீ
விதையாக விழுந்த மண்ணின்
விதியை மாற்ற வேள்விசெய்

சதைகளுக்காய் அலைகின்ற
சண்டாளரைச் சங்காரம் செய்—அங்கு
பதைபதைக்கும் நெஞ்சுகளுக்கு
பாலனவர்—பயம் வேண்டாம்.

தயங்கித் தயங்கி நின்றால்
தாயகமே தவறிப் போய்விடும்
மயக்கம் நீங்க மருந்துடன் வா!
மற்றவரையும் எழுப்புவோம்.

தூங்கிக் கொண்டிருந்ததால் தான்
தூர்ந்து போனது நம் தேசம்
துன்பத்தைத் துடைத் தெறிய யாவரும்
துப்பாக்கிகளை ஏந்துவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பான இளைஞரால்தான்
துணிவுடன் வாழ்கிறோம்—இதுவரை
படித்த பாடங்கள் போதுமடா
பலனுக்காகப் பணிசெய்வோம்.

பணிந்து பணிந்து கேட்டதால்
பயனெதுவும் கிடைக்கவில்லை—இனியும்
குனிந்து வாழக் கோழைகளில்லை
கயவரை தேடிக் களம் புகுவோம்.

குண்டுகளையும் ஆயுதங்களையுமே
எதிரிமிகவும் நேசிக்கிறான்—அதைக்
கொண்டே அவனுக்குப் பரிசளிக்க
திரண்டு அணியாய் புறப்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈழக்காவலர்காள்

சிங்களவன் எம் சிரமெடுக்க நினைக்கிறான்
சினங் கொண்டே எங்கும் சீர்கேடு செய்கின்றான்
எங்கள் தமிழ் சங்கத்தமிழ் என்றது போதும்
எங்களினம் அழியாது காத்திடலாம் வாரீர்.!

தூங்கியது போதும் துடித்தெழுந்து வாரீர்
துயிலதை மறந்து துய ரைத் துடைப்போம்
ஏங்கி யேங்கி எத்தனைகாலம் வாழ்வது
எல்லாரும் திரண்டே எமதீழம் வாரீர். !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே போனால் என்னதான் மிச்சம்
சொல்லாக இருப்பதைச் செயலாக்க வாரீர்
பொல்லாத சிங்களனைப் பொடிப் பொடியாக்க
போர்முரசு கொட்டியே புலியாக வாரீர்.!

பொன்விளையும் பூமிபொழிகள் சூழ்ந்திருக்கும்
பொட்டலமாய் பொதிகளாக தானியம் குவிந்திருக்கும்
மண்ணுக்கே மகிமைதரும் மாந்தர்கள் சூழ்ந்தும்
மகிழ்ச்சியிலே கால வெள்ளம் புரண்டு ஓடும். . .

கண்ணிலே கண்டதெல்லாம் கனவாய் ஆனது
கவலையிலே வாழ்வின்பிடி அறுந்து போனது
என்ன வந் நது இம்மண்ணுக்கு யார் அறிவார்
இறுதியிலே தமிழன் வெல்வான் பாரறியும். . .

கல்லாத சிங்களவன் கதையளப்பான்
கள்ளத்தை உள்ளே வைத்து கழுத்தறுப்பான்
வில்லாக வளைந்தாதல் விடுதலை பெறுவோம்
விண்ணாளும் வேந்தர்கள் விருப்பைத் தீர்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை:



எனக்கு வருகின்ற
தாலிக் கயிறானது
என் தந்தையின்
தூக்குக் கயிறாக
ஆகி விடக்கூடாது
எனக்கு வேலியில்லாமல்
போனாலும் பரவாயில் லை
என் தாயின் தாலியாவது
நிலைத்து நிற்கட்டும். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ பட்ஷியே

ஏ பட்ஷியே
எங்கிருந்து வருகிறாய். . .?
நான் அழைப்பது
உனக்குக் கேட்கவில்லையா. . .?
ஏன் அவசரப்படுகிறாய்
என் கேள்விக்குப்
பதில் கூறிவிட்டுப் போவாய். .
உன் தேசத்தை விட்டு
இந்தப் பாவிப்பட்ட மண்ணுக்கு
ஏன் பறந்து வந்தாய். . .?
பாவிகளின் பூமியில்
பருவகாலம் தொலைந்துவிட்டது
ஏ பட்ஷியே
நீயேன் இங்கு வந்தாய். . . ?
ஜீவராசிகள் காப்பகங்களில்
கறையான்கள் புற்றெடுக்கிறது. . .
ஜீவகாருண்யர்கள் எப்போதோ
தேசாந்திரம் போயினர். . .
கருகிப்போனகாடுகளும்
காய்ந்து போன கங்கைகளும்
பெருகிவரும் உருக்குலைந்ததீவிது. . .
நீயேன், தொலைதூரத்திலிருந்து
தொல்லைகள் நிறைந்த
இந்த பூமிக்கு வந்தாய். . .?
இங்கே,
பருந்துகளும் கழுகுகளும்
கைகுலுக்கிக் களித்திருக்கின்றன. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதனப் புளுக்களையே
சாகடிக்கின்ற மாந்தர்கள்
சந்தர்ப்பம் பார்த்து இருக்கின்றார். . .
வந்த களைப்பை மறந்து
உன் சொந்த மண்ணுக்கு
சுணங்காமல் போ. . .
பரலோகம் இந்நாட்டுக்கு
பக்கத்தில்தான் இருக்கிறது. . .
பிணந்தின்னிக் கழுகளிள் கடமை
இங்கு—மனிதனுக்குக் கைமாறிவிட்டது. . .
நாங்கள் பிறந்த மண்ணில்
இன்று பிசாசுகள் குடியிருப்பு. . .
பிழைக்கத் தெரிந்தவர்கள்
பிறதேசங்களுக்குப் படையெடுப்பு. . .
பட்ஷிகளும் கூடத்தான்
பயணப் பட்டுப் போயின. . .
பாவம் நாங்கள்
பாதிக்கப் பட்ட பாதிமனிதர்கள்
கரைசேர முடியாத
கனமான ஓடங்கள். . .
தேச விடுதலைக்காய்
தேய்ந்து போன ஜீவன்கள். . .
வேசங்கள் போடுபவரை
வேரறுக்க வந்தவர்கள்
ஏ பட்ஷியே
எதிரியின் மரங்களிலே தங்க ாதே
உனக்கும் பாதுகாப்பில்லை
எங்களின் துப்பாக்கிகளில்
இன்றிரவு மட்டும்
துணிவோடு இளைப்பாறிச்செல். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜ்ஜியங்கள்

அன்பென்று சொல்லி எமை அழைக்கிறார்
அடுத்தவனைக் கவர்வதற்காய் முயலுகிறார்
வம்பென்று விலகுவோரை இகழுகிறார்
வடிவாக வேதம் தெரியா வல்லவர்கள்.

ஊரராய் பேசித்தினம் பிழைக்கிறார்
ஊமைகளைப் பேசவைப்போம் என்கிறார்
வேரில்லா மரமாட்டம் சிலர் இங்கே
வேதனம் பெறுவதற்காய் அலைகிறார்.

தேசிய ஒருமைப்பாடு என்கிறார்
தேசத்துக்கு எதுவும் செய்யாத்துரோகிகள்
வேசியை ஒத்த இவ் வீணருக்காய்
வேட்டு வைப்போம் நண்பர்களே வாருங்கள்.

காசுக்காய் ஊரூராய் அலைகிறார்
கடவுளையே காட்டுவோம் என்கிறார்
ஏசுவின் பெயரைச் சொல்லிப் பிழைக்கிறார்
எள்ளளவும் தூய்மையில்லா பூஜ்ஜியங்கள்.

பிறருக்காய் சேவைசெய்யப் புறப்பட்டால்
பிற்காலம் உனக்காகத்தான் விடியும்–நீ
உனக்காக உடுப்புக்காக இறைஞ்சுகிறாய்
உண்மையிலே நீயெல்லாம் உத்தமனா.

எனக்காக எதையும் நீ செய்ய வேண்டாம்
ஏசுவின் பெயரை மட்டும் கொல்லாதே !
உனக்காக ஊரை ஏமாற்ற எண்ணாதே–தவறில்
உதைவிழும் உறங்குவோர்க்கும் விழிப்பு வரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதப்படாத ஏடுகள்

பசியும் தாகமும்
பறந்து மறந்து போயின. . .
என் கண் களோ
உறக்கத்தின் உறைவிடத்தை
தேடியலைந்தன. . .
கடமையின் கரங்கள்
தன் திசைகாட்டி
தடுத்தாட் கொண்டது. . .
சில்லூறு களின் பாடல்களிடையே
என் செவிகள்
சமிஞைகளின் சங்கீதத்தை
வரவேற்க காத்திருந்தன. . .
எங்கோ ஒரு மூலையில்
எந்திரத்துப்பாக்கி யொன்று
ரவைகளைத் துப்பும் சத்தம். . .
உருக்கொண்ட என் கருவிகள்
உரசும் தோளுக்கு முத்தமிட்டன. . .
எங்கும் ஒளிதூவி
எதிரியின் வான வூர்திகள்
வல்லூறாய் வட்டமிட்டு
கால் படாத கானகமெங்கும்
வேட்டுகளை விதைத்தன. . .
வேவுபார்த்த வீரனின்
வெண்கலக்குரல்
'வயர்லொஸ்' ஊடாக
வந்து வெடித்து சிதறியது . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கருவிகள்
எதிரிகளை நோக்கி அதிர்ந்தன. . .
டட் டட் டும். . .
டும் டட் டும் டும்
வாகை சூடிப் பரணிபாட
வடிவான ராகம் கிடைத்தது. . .
எங்கும், அதிரும் இடியோசை
வண்ணங்களாய் வானத்தில்
வாணவேடிக்கை நிகழ்ந்தது. . .
எதிரியின் புறமுதுகு
இருட்டிலும் தெரிந்தது. . .
மெள்ள ஆயதங்கள்
வியர்வை துடைத்துகொண்டன. . .

விடிகாலைப் பொழுதில் ஒரு
அமைதி குடி கொண்டது. . .
அறிவித்தல் கிடைத்தபோது
அனைவரும் சங்கமம் . . .
அங்கே,
குண்டு வீச்சுவிமானமொன்று
குடல் சிதறிக் கிடந்தது
குரல்வளை அறுபட்டும்
பரல் குண்டை முத்தமிட்டும்
ஆறு சிப்பாய்கள் அலங்கோலமாய். . .
எங்கும் மகிழ்ச்சிப்பாடல்
எல்லோர்க்கும் நன்றி கூறும்
எம் மண்ணின் சுகந்தவாசம்
சுமந்த காலைத்தென்றல். . .
ஏவுகணை வீரனை
என் கண்கள் தேடின. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பரபரப்பு
எல்லோரிடத்தும் ஒரேகேள்வி
எங்கே போனானவன்?
விடிந்தும் விடியாத இருளில்
அந்த வில்லேந்தியைத் தேடி. . .
மௌன வேட்டை
நீண்டநேர இடைவேளைக்குப்பின்
ஒரு உருவம் தூரத்தில்
அவனா அது. . .? அதுவா அவன்?
ஆனந்தமா ஆச்சரியமா?
அவனுருவம்தான் அழைத்தேன். . .
அருகில் சென்றேன்— நிலைகுலையாத
தன் கருவியை அணைத்தபடி
நீண்ட சயனத்தில். . —அவன்
நிம்மதியாய் சாய்ந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்ன விலை:

என் காதலா. .
உன் விலையை
இப்போதே கூறிவிடு
அப்போது தான்-நான்
மலிவான விலையில்
மாப்பிள்ளை தேடமுடியும். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைகள்

பஸ்தரிப்பில் நின்று
'லிஸ்ஸா' கேட்டேன்...
இலையே இழுத்து-
இழுத்துப்போர்த்திக் கொண்டயே...
பொட்டு வைத்த
ரோஜாஎன்றேன்-
போயும் போயும் இதற்கு
'போலிசைக்' கூப்பிட்டாயே. . .
உன் கண்ணழகைக்
கண்ணாடி மறைக்கிறதேன்ற-
உண்மையைச் சொன்னதக்கு
உன் அண்ணனின்
அதிரடித்தாக்குதலுக்குள்ளாக்கினாய்...
உன் வாயில் என்ன
கொழுக்கட்டையா? இல்லை ஊமையா?
இப்படிக்கேட்க என் மனம்
சஞ்சலப்பட்டது....
போனது போகட்டுமென்று
உன் வாசல் தேடிப்
பெண் கேட்க வந்த என்மேல்
'அல்சேஷனை' அவிழ்த்துவிட்டாயே...
அப்போதுதான் கண்டேனடி -
உன் கழுத்தில் தாலியை. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீயாகும் பூக்கள்

யார் இட்டசாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
பார்போற்ற வாழ்ந்தவர்கள்
பல்திசையும் ஆண்டவர்கள்
யாருமற்ற அனாதைகளாய்
யமனுலகு போகும் இந்நிலைக்கு
யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
நேர்வழியில் நின்றுழைத்து
நெருநாளாய் பொறுமை காத்து
போர்வழியில் போய் இன்று
பொருதி உயிர் மீட்கும் நிலைக்கு
யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
ஊர்விட்டு ஊர்சென்று
உடமைகளையும் பறிகொடுத்து
நேர்மையற்ற நீசர்களால்
நம் தமிழர் அருகும் நிலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
ஏர்பிடித்து பசியும் போக்கி
எமதீழத்தை வழமாய் ஆக்கியவர்
நார்உரிந்த நல்மரமாயின்று
நலிவுற்று நாசமாகும் நிலைக்கு
யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
தேரின்றி திருவிழாவுன்றி
தெய்வங்களை வேண்டி இன்று
வேர் அறுத்த பெருமரமாய்—தமிழர்
வேதனையில் வீழ்கின்ற நிலைக்கு
யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .
கார் என்றும் கடமையென்றும்
கையேந்திய கயவர்போக
போரில்தான் புலரும் புதுஈழமென்று
புறப்பட்டுப் புயலானவர் நிலைக்கு
யார் இட்ட சாபமோ—இல்லை
நாம் செய்த பாபமோ தோழி. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னரும் நண்பனுக்கு

உனக்கொன்று சொல்வேன்- நண்பனே
ஊரைவிட்டு இங்கே ஓடிவராதே
எனக்கென்று தனியாக வாழத்துணிந்து
என்னரும் நாட்டை மறந்து வந்து
கனக்கின்ற நெஞ்சுச் சுமையுடன்-இங்கே
கலங்கிப்போய் நிற்கிறேனடா நான்.

வீட்டிலே இருந்த காலத்தில் -பொழுதை
வெட்டியாய் கழித்துவிட்டேன்
வெள்ளிக் காசுக் காசை கொண்டு
வெளிநாட்டுக்குத் தாவி வந்துவிட்டேன்
சல்லிக் காசுக்கும் வழியில்லாமல்-இங்கு
சந்தியில் நிற்கிறேனடா நான்.

உயிரைத் துச்சமென எண்ணியங்கே-என்
உடன் பிறப்புகள் ஆயுதமேந்த
உடுத்த துணிமட்டும் மிச்சமென்று
உறவினர்கள் இரவுபகலாய் விழித்திருக்க
படுகுசியாய் இங்கு பறந்து வந்தேன்-இன்று
படுகுழியில் விழுந்துவிட்டேனடா நான்.

தாய்த்திரு நாட்டை மறந்து-இன்று
தப்பிப் பிழைத்து ஓடிவருவோரை
நாயிலும் கீழ்த்தரமாகவே-நாளை
நம்மவர் மதிப்பிடுவாரடா
நானதில் அடங்கிப்போனேன்-நண்பா
நானிதையே உனக்குச் சொல்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கும் எனக்கும்

இறப்பு உன்னால்தான்
என்று எனக்கு
விதியை இறைவன்
எழுதியிருப்பானானால்
சிறப்பு என்பாயா கண்ணே.?
என் விதி
வீதிவிபத்தாகியதால்
விலகிப் போனாயா?
இல்லை -
இவன் வலது குறைந்தவன்
என்று விலகிக் கொண்டாயா?
உன்னுடன் வாழ்ந்தது தான்
வலது குறைந்த வாழ்க்கை ...
இது எனக்கு நிறைந்த
நிஜவாழ்க்கையடி ...
சீதனத்துக்காகக் கையை
நீட்டியதாலோ என்னவோ
கடவுள் என் கையைக்
களவாடி விட்டான் ...
அது போலி வாழ்க்கை என்று
புரிந்தது இப்போது தானடி ...
பணத்தில் படுக்கை விரித்த உனக்கு
இந்தப் பிணத்தைப்
பிடிக்காது தானே ...
மணத்தை இழந்த மல்லிகையின்
உண்மையான நிறம் -
இப்போதுதான் ஊருக்குத் தெரிகிறது ...
மனம் தனிமையை விரும்புகிறது
உனக்கும் இது -
பொருந்துமென்று நினைக்கிறேன் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரிகைகளும் ஓவியங்களும்

என்னை வரைந்த தூரிகைகள்
எப்படியெல்லாமோ தேய்கின்றன...
வண்ணமிருந்தால் சுவரில்லை
சுவரிருந்தால் விரல்களின் தீண்டாமை ...
இல்லையேல் –
வரண்ட வர்ணக்கலவை
வருடாத கரங்கள்...
எப்படியோ என்னைச்
சட்டத்துக்குள் அடைத்துச்
சுவரில் சொருகி விட்டவன்
தூரிகைகளையேன்- தனித்து
துன்புறுத்துகிறான்...?
ஓவியத்தைத் தூரிகையிடமிருந்து
ஒளித்து வைப்பதால் என்னலாபம்?
தூரிகைகள் துவண்டுகிடக்கின்றன...
இந்த ஓவியம் –
உயிருடனிருந்தும் கூட
உறவுகளைக் காணாது
உருகுகின்ற நிலை...
தீயள்ளித் தின்றாலும்
தீராது சோகம்...
பூமியே புருவங்களை
உயர்த்திப் பார்க்கும் போது
படைத்தவன் தூரிகைகளைப்
பார்க்க முடியாதபடி தூரத்தே
தள்ளிவைத்து விட்டதேனோ?
அவனையும் சட்டங்களுக்குள்
அடைத்து- சுவரில் காலமெல்லாம்
தொங்கவிடவேண்டும் ...
அப்போது அவனுக்கும் புரியும் –
பாசம் பந்தம் பரிதப்பு அனைத்தும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமைகளைத் தந்துவிடு

உன் ஞாபகங்களை
என்னால் மறக்கமுடியவில்லை...
நீ எப்படியோ?
மகரந்த மணிகளை
மண்ணில் தூவுகின்ற
எத்தனை இனிய மாலைகளில்
மரணமும் நம்மை பிரிக்காது
–என்று சபதமெடுத்தோம்...
நீ பிரிந்து போனாய்–
என்னால் உன்னை
நினைக்காமல் இருக்க முடியும்..
உன் ஞாபகங்களைத் தான்
மறக்க முடியவில்லை..
சந்திக்கும் பொழுதுகள்
குறுகிப் போனதும்
பிரிவின் பின்
மாலை என்ன–
காலை கூட
நீண்டு போனதும்
எனக்கு மட்டும் தானா...?
கண்களினால் காதலை–
பருகியதாலோ என்னவோ
தூக்கமும் காலியாகப் போனது
தூக்கத்தை தொலைத்ததை விட
என் இமைகளை இழந்ததினாலே
பெரிதும் கஸ்ரப்படுகிறேன். ...
தயவாய் கேட்கிறேன்–
நான் விழி மூடவேண்டும்..
நீ திருடிச்சென்ற என் இமைகளை
திருப்பித் தந்துவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வெளியீடு ...

# இன்னொரு ஜனனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது!

இரண்டாம் பதிப்பு

# தீயின் வார்ப்புகள்




தொடர்புகளுக்கு:-

V.A.Puvanenthiran.

Lehrerstr-20.

47167Duisburg.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org